REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 30உ புதன் (15—12—54) ★ ★ வெளியூர்: மார்கழி 1உ வியாழன் (16—12—54) [இதழ் 158

## தங்க நிற மங்கையரைத் தேடாதீர்! கறுப்புநிறப் பெண்களை வெறுக்காதீர்!

"இளைஞர்கள் 'தங்க நிற'முள்ள பெண்களையே மணந்து கொள்ள விரும்புகிறார்கள். நாம் பிற நாட்டவரை நிறத் துவேஷிகள் எனக் கூறும்போது, நாமே கறுப்பு நிற மங்கையரை மணந்து கொள்ள மறுப்பது,மலானின் நிறவெறியைவிட மோசமானதாகும்.,

"மனைவியரைத் தேடுவதில் வெளிப்பகட்டை குறிக்கோளாகக்கொள்ளாது, குணம், பண்பு முதலிய அம்சங்களையே கவனிக்க வேண்டும். நாட்டில் இயற்கையிலேயே கறுப்பு நிறமுள்ள பெண்களே அதிகம். அவர்களை வெறுக்கும் இளைஞர்கள் தங்கள் நிறத்தையும் கவனிக்க வேண்டும்."

இந்த உபதேசங்களை நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் கூறியிருக்கிறார்.

# இந்தியப் பேரரசின் போக்கில் பல்வந்த்ராய் அதிருப்தி

## குடிமக்களாக மாறும்படி முன்னாள் மன்னர்களுக்கு கோரிக்கை

### மன்னர்கள்மானியங்குறித்துஒரிசா காங்கிரஸ் மாநாட்டில் கண்டனம்

பி. எஸ். நகர், டிச. 13—

"தனிப் பிரிவாகவே இருந்து, அதற்குரிய தனிச் சிறப்புகளைப் பெற்றுவர விருப்பமா, அல்லது சாதாரணக் குடிமகனாக இருந்து அதற்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள விருப்பமா என்பதை, குறிப்பிட்ட ஒரு காலவரையறைக்குள், சுதேச மன்னர்கள் முடிவுகட்டிக்கொள்ள வேண்டும்."

—இவ்வாறு, காங்கிரஸ் பொதுச்செயலாளர் பல்வந்த்ராய் மேதா குறிப்பிட்டுள்ளார்.

ஒரிசா மாநில காங்கிரஸ் அரசியல் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய அவர், இதுபற்றி மேலும் பேசும்பொழுது, இத்துறையில் இந்தியப் பேரரசு அம்மன்னர்களிடம் ஏற்கனவே செய்துகொண்டுள்ள உடன்படிக்கையையும், அவ்வேறபாட்டில் தமக்கு முழு அளவில் உடன்பாடு இல்லாமையையும் விளக்கி உரைத்தார்.

முன்னாள் மன்னர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் வருஷ மானியத்தையும், அவர்கள் அனுபவித்து வரும் சிறப்புரிமைகளையும் கண்டித்து, இரண்டு நாட்களாக நடைபெற்ற மேற்படி மாநாட்டில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

## வேலையில்லாத் திண்டாட்டம்

### 5 ஆண்டு திட்டத்தால் குறைந்துள்ளதாம்

இந்தியாவில் 5 ஆண்டுத் திட்டங்களின் கீழ் துவக்கப்பட்டிருக்கும் பலவகையான அபிவிருத்தித் திட்டங்கள் அமுல் செய்யப்படுவதினால், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதை இப்போது திட்டமாக மதிப்பிட்டுக் கூறமுடியாது என்றாலும், மாநிலங்களிலிருந்து வரும் தகவல்களின்படி. வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு குறைந்துள்ளது என்று மக்கள் சபையில் உதவி திட்ட மந்திரி தெரிவித்திருக்கிறார்.

★

### வேலையின்மை பிரச்சினை:

நாடு முழுவதும் கணக்கெடுப்பு

திட்டக் குழுவின் ஆலோசனைப்படி நாட்டின் வேலையின்மைப் பிரச்சினை குறித்து இந்திய புள்ளி விவரத் தயாரிப்புக் கழகம் விரிவானதொரு கணக்கெடுப்பு நடத்துமென்றும், இந்தக் கணக்கெடுப்பு நகரம், கிராமம் ஆக நாடு முழுதும் நடைபெறுமெனவும் மக்கள் சபையில், உதவி மந்திரி மிஸ்ரா பதிலளித்திருக்கிறார்.

### திருத்தம்

நேற்றைய 'நம் நாடு' இதழ் (சென்னை 14-12-54) முதல் பக்கத்தின் மேல் பாகத்தில், 'இறப்பிலும் குடும்பப்பற்று' என்ற தலைப்பில் வெளியான செய்தி, ஜப்பான் நாட்டில் நடைபெற்றதென்பதை வாசகர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம். (ஆ—ர்)

## துணி நெய்வதில் புதிய முறைகள்

"துணி நெய்வதில் புதிய சிக்கனமான, சுலபமான முறைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன," என்று எப். சி. டாய் என்ற விஞ்ஞான ஆராய்ச்சியாளர் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் புதிய முறைகளினால், சுலபமாக, உயர்ந்த ரகத் துணிகளைத் தயாரிக்க முடியுமாம்.

லங்காஷயரில் உள்ள ஒரு ஆலை அதிபதி, இந்தப் புதிய நெசவு முறையினால் ஆண்டு தோறும் அவர் வைத்திருக்கும் நான்கு இயந்திரங்களினாலும், இயந்திரம் ஒன்றுக்கு 250 ஸ்டர்லிங் மிச்சப்படுத்துவதாகவும் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

## அழைக்கிறார்கள்!

கிழக்கு வங்கத்தில் ஐக்கிய முன்னணி சார்பிலிருந்து கலைக்கப்பட்ட மந்திரி சபையின் முதல்வரான பஸ்லுல் ஹக், ஆலோசனைகளுக்காக, கராச்சிக்கு வருமாறு பாகிஸ்தான் சர்க்காரால் அழைக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

## போலீஸ்பணிக்குராணுவம்

### போலீஸ் முற்றுகைக்குள் இன்ஸ்பெக்டர்-ஜெனரல்

### எழுத்துமூல உறுதிக்குப் பின்பே விடுதலை

கல்கத்தா, டிச. 14—

மேற்கு வங்க போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலான எச். என். சர்க்கார் ஏறிவந்த மோட்டாரை, ஹௌராவில் 200 போலீஸ்காரர்கள் சுற்றி வளைத்துக்கொண்டனர். 'வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போலீஸ்காரர்களைக் கைது செய்வதின்மூலம் தங்களை அவமானப்படுத்தியதில் நீதி வழங்க வேண்டும்,' என அவர்கள் வாதிட்டனர். அவர்களுடைய குறைகளை கவனிப்பதாக எழுத்துமூலம் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் வாக்களித்தபின்பே, அவரை மேற்கொண்டு செல்ல போலீஸ்காரர்கள் அனுமதித்தனர்.

சம்பளம், படி குறித்து அமைதியான உண்ணா நோன்பில் ஈடுபட்டுள்ள போலீஸ்காரர்களின் தொகை, ஹௌராவில் 1000-க்கு வந்துவிட்டிருக்கிறது.

மேற்படி வேலை நிறுத்தம், ஹூக்ளி, பான்குரா, மூர்சிதாபாத் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பரவி இருப்பதாகவும், போலீஸ் ஆயுதசாலைகளையும், அரசாங்க நிதி உறையுள்களையும் இராணுவத்தினர் பாதுகாத்து வருவதாகவும் தெரியவருகிறது.

வேலையிலிருந்து விலக்கப்பட்ட மனம் புழுங்கியுள்ள சில போலீஸ்காரர்களே இக்கிளர்ச்சிக்கு மூல காரணம் என்றும், அவர்களின் சம்பளம்—படி உயர்வு பற்றி ஏற்கனவே அரசாங்கம் தீவிரமாக யோசித்து வருவதாகவும் சர்க்கார் சார்பில் கூறப்பட்டிருக்கிறது.

வேலை நிறுத்தம் கண்டிக்கத்தக்கது என்றும், தங்களுடைய குறைகளை அரசாங்கத்தின் நினைவிற்குக் கொண்டு வருவதற்காக இச்செயலை மேற்கொள்வதற்கு எந்தவித நியாயமும் போலீஸ் படையினருக்குக் கிடையாது என்றும், முதல் மந்திரி பி. சி. ராய், நிருபர்களிடம் கூறியுள்ளார்.

## 'ஐ. நா. காரியதரிசியை சந்தியுங்கள்'

### சூ - என் - லாய்க்கு நேரு வேண்டுகோள்

புதுடில்லி, டிச. 14—

சீனாவில், சிறையில் வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க விமானிகளின் எதிர்காலம் பற்றி கலந்து பேசவரும் ஐ. நா. சபையின் காரியதரிசியைச் சந்தித்துப் பேசுமாறு சீனப் பிரதமர் சூ-என்-லாய்க்கு பண்டித நேரு தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதியுள்ளார் என்று தெரிகிறது.

★

### ஐ. நா. சபை பொதுச் செயலாளர் இந்தியா வருகை

புதுடில்லி, டிச. 14—

ஐ. நா. சபையின் பொதுச் செயலாளர் ஜெனரல் ஹாமர்ஸ் ஜோயெல்டு, அமெரிக்கக் கைதிகளை விடுதலை செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொருட்டு சீனத் தலைநகரான பீகிங் செல்லும் வழியில் இந்தியாவுக்கு வரக்கூடும் எனத்தெரிகிறது.

சீன அரசாங்கத்திடமிருந்து பதில் கிடைத்ததும், அவரது பயணம் உறுதிப்படுமாம்.

இந்திய அரசாங்கத்துடனும் அமெரிக்கக் கைதிகள் விடுதலைப் பிரச்சினை குறித்து அவர் விவாதிப்பார் என நம்பப்படுகிறது.

## குறுக்கெழுத்துப் போட்டியைத் தடுக்க சட்டம்

### 27 மாநிலங்களில் ஆதரவு

புதுடில்லி, டிச. 14—

குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்தவும், ஒரேயடியாகத் தொலைத்துக் கட்டவும் 27 மாநில அரசாங்கங்கள், தங்கள் ஆதரவை அறிவித்துள்ளன.

இத்தகவலை, உள்நாட்டு அமைச்சர் கட்ஜு மக்கள் சபையில் குறிப்பிட்டார்.

அகில இந்திய ரீதியில், இது பற்றி ஒரு சட்டம் இயற்றுவது குறித்து அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

## கரூர் வட்டத்தில் மாணவர்கள் வேலை நிறுத்தம்

### தமிழாசிரியரை வேறு ஊருக்கு மாற்றியதே காரணமாம்

கரூர் வட்டத்தில் வங்கல் எனும் ஊரில் உள்ள மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், பள்ளித் தமிழாசிரியர் ஜெயங்கொண்டத்திற்கு மாற்றப்பட்டதை எதிர்த்து, கடந்த 6-ந் தேதி முதல் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனராம்.

அந்தத் தமிழாசிரியர், தமிழ் வகுப்பிலிருந்த மாணவிகளை 'கொஞ்சும் புறாவே' என்ற காதல் கீதத்தை இசைக்குமாறு கூறினாராம். மாணவிகள் மறுத்துவிட்டிருக்கின்றனர். விஷயம் தலைமையாசிரியருக்கு எட்டியது. தமிழாசிரியரோ, தனது தமிழ் வகுப்பு சம்மந்தப்பட்டமட்டில் தலைமையாசிரியரின் தலையீட்டை விரும்பவில்லையாம்—அதை எதிர்த்திருக்கிறார். தொடர்ந்து, தமிழாசிரியர் ஜெயங்கொண்டம் பள்ளிக்கு மாற்றப்பட்டாராம்.

இந்த மாற்றல் உத்தரவை எதிர்த்தும், தொடர்ந்து அந்த ஆசிரியர், வங்கல் பள்ளியிலேயே பணியாற்ற அனுமதிக்க வேண்டுமெனவும் கோரி, மாணவர்கள் பள்ளி செல்லாது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

இந்தியாவில் 1953—'54-ல், மொத்தம் 7·4 கோடி கிராமபோன் ஊசிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

## ஷேக் அப்துல்லா சிறைவாழ்வு

### மேலும் ஆறு மாத காலம் நீடிப்பு

இப்போது சிறையிலுள்ள காஷ்மீர் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லாவின் சிறைவாசத்தை மேலும் ஆறுமாத காலத்திற்கு நீடித்துள்ளனர் என்று தெரிகிறது.

(4-ம் பக்கம் பார்க்க.)

## ஆற்காடு இரட்டையர் பெற்றபேறு!

### டாக்டர் ஏ. ஆர். முதலியார்

ஐ. நா. சபையின் கல்வி, கலாச்சார நிறுவனத்தின் (யுனெஸ்கோ) நடைமுறை அமைப்புக் குழுவின் தலைவராக டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

### டாக்டர் ஏ. எல். முதலியார்

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, கலாச்சார நிறுவனத்தின் (யுனெஸ்கோ) தலைவராக டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 15—12—1954 புதன்


# பதவிநாதன் விளையாடல்!

திரு—கொச்சி நீங்கலாக மற்ற மாநிலங்கள் அனைத்திலும், காங்கிரஸ் கட்சிதான் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறது. அவ்வாறு இருப்பதற்கும், அக்கட்சியின்மீது பொது மக்களுக்குள்ள பேராதரவு தான் காரணம் எனவும் சொல்லிக்கொள்ளப்படுகிறது. இக்கூற்றில் நாம் ஒப்புக்கொள்ளத் தகுந்த உண்மையும் உண்டு; அந்த அளவிற்கு ஒப்புக்கொள்ள அருகதையற்ற பொய்மையும் உண்டு.

அரசியல் விழிப்பில் பின்தங்கிக்கிடக்கிற மக்களிடத்தில், மூப்படைந்த காங்கிரஸ் கட்சிக்குத்தான் ஆதரவு இருக்க முடியும். அதில் வியப்பு ஒன்றுமில்லை.

மற்ற அரசியல் கட்சிகளுக்கு இல்லாத ஒரு சிறப்பு காங்கிரஸ் கட்சிக்கு இருந்து வருகிறது. அதாவது, வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று, அதை வெளியேற்றுவதில் வெற்றி கண்டு இருக்கிறோம் என்ற பெருமை, அரசியல் மூலதனமாகக் காங்கிரஸ் கட்சிக்கு இருக்கிறது. அம்மூலதனம் இந்த ஏழாண்டுகளாகத் தீவிரமாகக் கரைந்து கொண்டுதான் வருகிறது. இன்னும் சில ஆண்டுகள் வரை அம்மூலதனம் பெருங்காயமிருந்த பாண்டமாக காங்கிரசிற்கு உதவத்தான் உதவும்.

எதிர்பார்க்கின்ற அளவுக்கு நாட்டு மக்களிடை இருந்து வரும் அரசியல் விழிப்புணர்வு வேகமாக வளம் பெறவில்லை. அது, ஆமை வேகத்தில் உள்ளது. நாம் காண்பதற்கு மாறாக, அரசியல் விழிப்புணர்வு வேகமாக வளர்ந்திருக்குமானால், ஏற்கனவே காங்கிரஸ் சேமித்து வைத்திருந்த அந்த அரசியல் மூலதனம் இதற்குள்ளாகத் தவிடுபொடியாகிவிட்டிருக்கும்.

காங்கிரஸ், இதற்குள்ளாக வந்திருக்க வேண்டிய கீழான நிலைக்கு இன்னமும் வராமல் இருப்பதற்கு, பெரும்பான்மையான மக்களிடம் இருந்துவரும் அரசியல் விழிப்புணர்வு இன்மை முக்கியமான ஒரு காரணமாக இருந்த போதிலும், அது நீங்கலாக மற்றொரு முக்கிய காரணமும் இருந்து வருகிறது. அதாவது, மற்ற அரசியல் கட்சிகளிடத்தில் இருந்துவரும் அடிப்படை கொள்கை முரண்பாடும், அவைகள் மக்களுக்குக் காட்டும் தெளிவற்ற நடைமுறைகளும், மக்களிடை புதிய அரசியல் விழிப்புணர்வை உருவாக்கத் தவறிவிடுவதோடு மட்டுமல்லாமல், இருக்கும் அரசியல் விழிப்பையும் குழப்பிவிடக்கூடியனவாகவும் உள்ளன. மற்ற கட்சிகளிடம் காணப்பெறும் இந்த அவலட்சணப் போக்கு, காங்கிரசின் செல்வாக்கைக் கரைத்தொழிப்பதற்கு பதில், பெருக்குவதற்குத் துணை செய்கிறது. காங்கிரசைப் போன்றே, தங்களையும் அகில இந்திய அரசியல் கட்சிகள் என்று சொல்லிக்கொள்ளும் கட்சிகளின் நோக்கும் போக்கும் இந்த நிலையில்தான் இருந்துவருகின்றன.

விடுதலை போராட்டத்தினால் காங்கிரசிற்குக் கிடைத்துள்ள அரசியல் மூலதனம், மற்ற அகில இந்திய அரசியல் கட்சிகளின் கொள்கை முரண்பாடு, அவர்கள் நடைமுறைகளில் உள்ள போக்கு, பெரும்பான்மையான மக்களிடம் காணப்பெறும் அரசியல் மந்த புத்தி ஆகிய அனைத்தும் காங்கிரசிற்குப் பக்கத் துணையாக இருந்து, மாநிலங்கள் அனைத்திலும் அதன் ஆட்சியே இருக்க உதவியளிக்கிறது என்றபோதிலும், அதனிடம் மக்கள் எதிர்பார்க்கின்ற நற்செயல்களை அக்கட்சியால் செய்ய முடியவில்லை. வேலையின்மையும், தொழில் வளம் பெருகாமையும், வறுமையும் வாட்டமும், பஞ்சமும் பிணியும் நாட்டில் தாண்டவம் புரிகின்றன. நாசம் நாட்டு மக்களை வலம் வருகிறது. பத்தாண்டு — இருபதாண்டுகளில் நாடு நலம் பெற்றுவிடும் என ஆருடம் கூறியவண்ணம் உள்ளனர் காங்கிரஸ் ஆட்சியாளர்கள்.

காங்கிரஸ்ஆட்சியால் நாட்டு மக்களில் பெரும்பான்மையினருக்குக் கிடைத்துள்ள வேதனை ஒருபக்கம் இருக்க, இதைப்பற்றி சிந்திக்கவே நேரமில்லாத நிலையில் காங்கிரஸ் கட்சிக்குள் குழப்பமும் கூச்சலும் இமயம்போல் வளர்ந்தோங்கி இருக்கிறது. இந்த வளர்ச்சி கட்டை பாய்ந்துவிடவில்லை. விநாடிக்கு விநாடி உயர்ந்து கொண்டே போகிறது.

மற்ற அகில இந்திய அரசியல் கட்சிகள் அறிந்தோ அறியாமலோ செய்யத் தவறிய ஒரு செயலை, அதாவது காங்கிரசிற்கும் பெரும்பாலான மக்களுக்கும் இருந்துவரும் கள்ள உறவை அறுத்தெறியும் பணியை, வேண்டா வெறுப்பாகக் காங்கிரஸ் கட்சியே செய்துகொண்டு வருகிறது. தன்னையே சீரழிக்கும் அப்பணியை விட்டு விலகவும் காங்கிரசால் முடியாது. தற்கொலை செய்துகொள்ளாமல் இருப்பதில் காங்கிரசிற்கு விருப்பம் உண்டு. ஆனால், அத்தகு வழி அதற்குத் தெரியாது—அறிந்து கொள்ளும் ஆசையும் இல்லை-உணர்ந்தாலும் அவ்வுயரிய வழி அதன் உள்ளத்திற்கு உவப்பளிக்காது.

எந்தெந்த மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் இருக்கின்றதோ, அங்கங்கும், காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவருக்கும், அந்தந்த மாநில காங்கிரஸ் குழுத் தலைவருக்கும் நல்ல உறவுமுறை இருப்பதே கிடையாது. பெப்சு, ராஜஸ்தான், பஞ்சாப், ஐதராபாத், மைசூர், சென்னை ஆகிய மாநிலங்களின் நடைமுறை வரலாறு, மேற்குறிப்பிட்டுள்ள உண்மையை மெய்ப்பிக்கப் போதிய எடுத்துக்காட்டுகளாகும். இந்த உட்பகைக்கு அகில இந்திய காங்கிரசும் பலியாகாமல் இல்லை. காங்கிரஸ் தலைமை பதவியும், இந்தியப் பேரரசின் பிரதமர் பதவியும் ஒருவரிடமே ஒப்படைக்கப் பட்ட பின்னர்தான், காங்கிரஸ் மேலிடத்தில் ஏற்பட்ட புயல் கட்டுப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு, மைசூர் சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவராக அனுமந்தையா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரசிற்குள்ளாக அவருக்குப் போட்டி ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே, அதற்கு முன் அங்கு முதல் மந்திரியாக இருந்த கே. சி. ரெட்டி அவர்களுக்கு ஆறுதல் கூறப்பட்டது காங்கிரஸ் மேலிடத்தால். இருந்தாலும், இந்த முன்னேற்பாட்டாலும்மைசூர் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு ஏற்படாமல், காங்கிரஸ் மேலிடத்தால் தடுத்துவிட முடியவில்லை.

அதிகார அரசியலின் இலக்கணப்படி முதல் மந்திரி அனுமந்தையாவிற்கும், மாநில காங்கிரஸ் தலைவர் வீரண்ணா அவர்களுக்கும் பகை மூண்டது.

இத்துர்நாற்றத்தை நாட்டு மக்கள் அறியாவண்ணம் மூடி மறைக்கக் காங்கிரஸ் மேலிடம் எவ்வளவோ முயன்றது. முயற்சியில் முழுத் தோல்வியும் பெற்றது.

'முதலமைச்சர் எதேச்சாதிகாரம் செய்கிறார்; ஊழலாட்சி நடத்துகிறார்; இதனால் காங்கிரஸ் பெயரும் கெடுகிறது; நாட்டு மக்களும் நலிகிறார்கள்.' —இவ்வாறு மாநில காங்கிரஸ் தலைவர் வீரண்ணா, அனுமந்தையா அவர்கள் மீது குற்றப் பத்திரிகை வாசித்தார்.

'காங்கிரஸ் தலைவரான வீரண்ணா, கட்சிக் கட்டுப்பாட்டைக் குலைக்கிறார்; அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, முதலமைச்சர் சார்பில் எதிர்க் குற்றப்பத்திரிகை வாசிக்கப் பட்டது.

பொருளைப் பறிகொடுத்தவனும், களவாடியவனும் பிள்ளையார் சிலை முன் வேண்டிக்கொள்வதுபோல், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இரு கூட்டமும், மேலிடத்துக் கட்டளைக்குக் காத்துக் கிடந்தன. இறுதியில், மேலிடத்துக் கருத்துரைப்படி, தன்மீது நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிந்து, அப்பரீட்சையில் அனுமந்தையா அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார். தனது வெற்றிக்கு அதிகமான ஆதரவு இருப்பதாகவும் முதலமைச்சர் கூறுகிறார்.

இத்தேர்தலில் ஏற்பட்ட முடிவினால், அனுமந்தையா அவர்களுக்கு முதலமைச்சர் பதவி உறுதியாகிவிட்டது. அப்பதவியிலிருந்து அவரை விரட்ட வேண்டுமென்ற வீரண்ணா அவர்களின் உள்ளக் கருத்துக்குத் தோல்வி கிடைத்துவிட்டது. தேர்தல் முடிவு இந்த உண்மையை அறிவிப்பதோடு நின்றுவிட்டது.

'ஊழல் ஆட்சி நடத்துகிறார் அனுமந்தையா' என மாநில காங்கிரஸ் சார்பில் குறை சொல்லப்பட்டதே, அதன் முடிவு என்ன என்பதை, இத்தேர்தல் முடிவு அறிவிப்பதாக இல்லை. அக்குற்றச்சாட்டு அப்படியே தான் இப்பொழுதும் இருக்கிறது. அக்குற்றச்சாட்டில் உண்மை இருந்தாலும் இருக்கலாம்; அல்லது வெறும் கட்டுக்கதையாக இருந்தாலும் இருக்கலாம்; அல்லது அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் பண்டிதர் குறிப்பிட்டது போல், 'மிகச் சிறிய' விஷயமாக இருந்தாலும் இருக்கலாம். அக்குற்றச்சாட்டு எப்படிப்பட்டதாக இருந்தபோதிலும், அது, பரிகாரம் தேடப்படாமலே அப்படியேதான் இருக்கிறது என்பதை மட்டும் நாம் மறந்துவிடக்கூடாது.

அனுமந்தையா அவர்கள் மீது நம்பிக்கை இருப்பதாக அதிகப்படியான சட்டசபை உறுப்பினர்கள் கூறியுள்ளபோதிலும், அவர் மீது நம்பிக்கை இல்லை எனவும் பலர் கூறி இருக்கிறார்கள். இப்போக்கில் உள்ள மனக் கசப்பு, என்றும்போல் அப்படியே தான் இன்றும் இருக்கிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது.

இவ்விரண்டும், அதிகார அரசியலின் இரு கூறுகளாகும்; பதவி நாதனின் கோரத் திருவிளையாடலாகும். இப்பதவி நாதன்தான், காங்கிரஸ் கட்சியைத் தேய்க்கும் பெரும் படையாக உள்ளது என்பதைக் கூறி இதை முடிக்கின்றோம்.

## 4000 கைத்தறி நெசவாளர்கள் கொண்ட ஊர்வலம்

கலர் சேலைகள் விசைத்தறிகளில் உற்பத்தி செய்வதை எதிர்த்து தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில், ஜபல்பூரிலுள்ள சுமார் 4,000 கைத்தறி நெசவாளர்கள், நேற்று மாலை நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர் எனத் தெரிகிறது.

பின் அவர்கள் பொதுக் கூட்டமொன்றில் கூடினர். அங்கு பேசிய நகர காங்கிரஸ் தலைவர் விசைத்தறிகளின் போட்டியிலிருந்து கைத்தறி நெசவாளர்களுக்கு சர்க்கார் பாதுகாப்பளிக்க வேண்டும்! கலர் புடவைகளை விசைத்தறிகள் உற்பத்தி செய்யக் கூடாது என்று சர்க்கார் உடனடியாகத் தடை விதிக்காவிட்டால் கைத்தறி நெசவாளர்கள் உயிர் வாழ்வதே இயலாததாகும் என்று குறிப்பிட்டிருக்கின்றனர்.

## மேலப்பாளையம் நகர சபைக் கூட்டம்

### போலீஸ் உதவியுடன் நடைபெற்றது

மேலப்பாளையம், டிச. 12—நகர சபைத் தலைவர் வீட்டின் முன்னர், நகர மக்களில் சிலர் வரிகளைக் குறைக்க வேண்டுமென்றும், வரி வசூலை ஒத்திப் போடவேண்டுமென்றும் கோரி ஆர்ப்பாட்டம் செய்தார்களாம்.

அப்போது, நகரசபைத் தலைவர் வீட்டில் இல்லையாம்; அவரது தமையனார், கலைந்து போகுமாறு ஆர்ப்பாட்டக்காரர்களைக் கோரி மறுநாள் நகரசபைக் கூட்டத்திற்குச் சென்று குறைகளைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டாராம்.

மறுநாள் நடைபெற்ற நகர சபைக் கூட்டத்தில் அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் ஏற்படுவதைத் தவிர்க்க சபைத் தலைவர் முகமது இப்ராஹீம் போலீசாரைத் தருவித்தார் என்று தெரிகிறது.

நகரசபைக் கூட்டம் முடியும் வரை, குருபாதம் என்ற போலீஸ் சப் - இன்ஸ்பெக்டர் கட்டிடத்திற்குள் இருந்தாராம். போலீஸ் குழு ஒன்றும் நகரசபை அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாம். ஆனால் எவ்விதச் சம்பவமும் நிகழவில்லை.

## மாணவர்களிடையே ஒழுங்கீனம்

### கே. வி. மேனன் கண்டிக்கிறார்

"ஆசிரியர்கள் மாற்றப்படுவது போன்ற சாதாரணமான காரியங்களிலும், மாணவர் விடுதிகளில் உள்ள குறைபாடுகள், தேர்வுத் தாள்களை கடினமாகத் திருத்துதல் இவை போன்ற பிரச்சினைகளிலும் மாணவர்கள் உணர்ச்சிவசப்பட்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்"

என்று கே.வி. மேனன், பாலக்காடு விக்டோரியா கல்லூரியில், 'ஒழுங்கின் முக்கியம்' என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவர், கொச்சி சர்க்காரின் விளம்பர, செய்தி இலாகா அதிகாரியாக இருந்தவர்.

மாணவர்களிடையே காணப்படும் ஒழுங்கற்ற தன்மைகளையும் அவர் கண்டித்தார்.

"அரசியலிலும், இதுபோன்ற ஒழுக்கக்குறைவு காணப்படுகிறதென்றும், அரசியல் வாதிகள் மட்டரகமான காரணங்களுக்காகப் பிரிந்து சென்று எதிர்ப்பு முகாம்கள் அமைக்கின்றனர் என்றும் அவர் கூறினர்.

பொருளாதாரத் துறையிலும் ஒழுங்கீனம் காணப்படுகிறது என்று அவர் கூறினர்.

அடிக்கடி வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் நடைபெறுகின்றன என்றும், முதலாளிகள் முதலீடு செய்ய பின்வாங்குகின்றனர் என்றும், தொழிலாளிகள் குறைந்த வேலை, அதிகக் கூலி என்று கூச்சலிடுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நீதி இலாகா பிரிவினை

நீதி, நிர்வாகம் ஆகிய இரு இலாகாக்களையும் தனித் தனியே பிரிப்பது என்ற திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்தில், இப்போது, வரும் ஜனவரி முதல் தேதியிலிருந்து, நீதி இலாகா பிரிக்கப்படுவதற்கான சர்க்கார் உத்திரவுகள் வந்துவிட்டதெனத் தெரிகிறது.

இதன்படி மதுரை மாவட்டத்திற்கு, ஒரு மாவட்ட நீதிபதி, ஒரு உதவி முதல் வகுப்பு நீதிபதி, 10 துணை நீதிபதிகள் நியமிக்கப்படுவர் எனத் தெரிகிறது,

மதுரை நகருக்கு 3 துணை நீதிபதிகள், ஒரு உதவி முதல் வகுப்பு நீதிபதி ஆகியோர் நியமனம் பெறுவராம்.

மேலூர், நிலக்கோட்டை, திண்டுக்கல், பழனி, பெரியகுளம், திருமங்கலம், உத்தமபாளையம் ஆகிய ஊர்களில் ஒவ்வொரு துணை நீதிபதிகள் இருப்பர்.

மாவட்ட நீதிபதியின் தலைமை அலுவலகம், மதுரை நகரிலிருக்குமெனத் தெரிகிறது.

நீதி இலாகா பிரிவினை மதுரை, திருச்சி மாவட்டங்கள், சென்னை நகரம் ஆகியவற்றில் வரும் ஜனவரி முதல் அமுல் செய்யப்பட்டுவிட்டால், மாநில முழுவதும் இத்திட்டம் அமுலாவது பூர்த்தியாகிவிடுமெனத் தெரிகிறது.

## 'தன் இச்சையாகவே இந்தி பரவ முடியும்'

### நிதி அமைச்சர் கருத்து

"இந்தியா இப்போது ஒரு ஐக்கிய நாடு என்றும், தமிழ் நாடு தனியாகப் பிரியுமென்று சிலர் கனவு காண்கிறார்கள்" என்றும், எஸ். ஜி. கிட்டப்பா நினைவு நாளில் பேசுகையில் சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறினர்.

இந்தி பற்றி குறிப்பிட்டு அவர் பேசுகையில், இந்தி படிப்பது அவசியம் என்றும், அதற்கு தமிழ் நாட்டில் எதிர்ப்பு இருப்பதையும் விளக்கினர். இறுதியில், "தன் இச்சையாகவேதான் இந்தி பரவ முடி முடியும்" என்று தான் நினைப்பதாகவும் அவர் கூறினர்.

# ஒரு தலைமுறைக்குள் வருமானம் இரட்டிக்குமாம்!

## தொழிலாளி-முதலாளி நலன்களைக் காக்க திட்டம் தீட்டுவார்களாம்!

*காங்கிரஸ் சர்க்கார் கொள்கை பற்றி தேஷ்முக் விளக்கம்*

"நாங்கள் ஒரு தலைமுறைக்குள் மக்களின் வருமானத்தை இரட்டிப்பாக்க விரும்புகிறேம்; வேலையில்லாத் திண்டாட்டத்தை 10 ஆண்டுகளில் ஒழிக்க விரும்புகிறேம்; இந்த நிலைமைகள் பற்றிய நல்லதோர் மாற்றத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் செய்து காட்ட விரும்புகிறேம்," என்று, இந்திய நிதி அமைச்சர் தேஷ்முக், கல்கத்தா வர்த்தக சபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"அதே நேரத்தில், நாங்கள், செல்வத்தையும் பொருளாதார சக்தியையும் சமமாகப் பங்கிட விரும்புகிறேம்," என்றும் அவர் கூறினர்.

"தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் ஆகியோர் இருவரின் நலன்களையும் உத்தேசித்து, இயந்திர சாதனங்களைப் பெருக்கி, ஆட்குறைப்பு செய்வதை விட, தொழில்களை விரிவாக்கி, இயந்திர சாதனங்களை அதற்குப் பயன்படுத்தும் முறையையே கையாள வேண்டும் என்றுதான் சர்க்கார் விரும்புகிறது," என்று அவர் மேலும் கூறினர்.

நமது பொருளாதாரத்தில் மிகப் பெரிய பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டம் தான் என்றும், மூலதனத்தை அதிகரித்து, நிதியின் அடிப்படையில் முதலீடு செய்யும் முறையை அமுல் செய்தால் இப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்றும் தேஷ்முக் குறிப்பிட்டார்.

"முதல் ஐந்தாண்டுத் திட்டம், வேலைகளுக்கான சந்தர்ப்பங்களை அதிகப்படுத்தியது; ஆனல், வேலை கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரிப்பது போலவே வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரிக்கிறது," என்றும் அவர் கூறினர்.

தியாகம் செய்வதின் மூலமும், கடின உழைப்பாலும் முதலீடு செய்யும் வாய்ப்புகள் அதிகரித்து, அதிக மூலதனம் தேவை என்னும் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நாம் வெளியார் உதவிகளைப் பெற முடியும்; கடந்த கால நிகழ்ச்சிகளைக் கவனிக்குமிடத்து, நாம், நமது பணியைச் சரிவரச் செய்தால் வெளியார் உதவி கிடைக்குமென்பதில் சந்தேகம் இல்லை; நம்மிடையே கிடைக்கும் மூலதனங்களை நாம் திரட்ட முயற்சிக்க வேண்டும்" என்றும் அவர் கூறினர்.

---

### கோவை திராவிட பஞ்சாலை தொழிலாளர்கள்

#### அடையாள வேலை நிறுத்தம் செய்வதென முடிவு?

12—12—54ல் கோவை தியாகராயர் படிப்பகத்தில் நடைபெற்ற திராவிட பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் யோசனைகள் பல கேட்கப்பட்டு, இறுதியில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

1. முத்தரப்புக் குழு சிபாரிசுகளை அரசியலார் உடனடியாக அமுலில் நடத்த வேண்டுமென கூறும் வகையில் தொழிலாளர்கள் 21—12—54-ந் தேதி அடையாள வேலை நிறுத்தம் செய்வதை இக்குழு மனப்பூர்வமாக ஆதரிக்கிறது. மேலும் அடையாள வேலை நிறுத்தத்தை அமைதியான முறையில் நடத்த வேண்டுமெனவும் இக்குழு வேண்டிக்கொள்கிறது.

2. திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் அமைப்புக் குழுவிற்கு திரு. இரா. சுந்தரம் அமைப்பாளராகவும், திரு. பி. அய்யாசாமி துணை அமைப்பாளராகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

3. சோமசுந்திரா மில்லிற்கு ஐவர் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டு, ஒரு பொதுக்கூட்டம் 26—12—54-ந் தேதி நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

* * *

5—12—54 காலை 9 மணிக்கு கோவை புகைவண்டி நிலயத்தில் தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கு கோவை நகர திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அன்று பிற்பகல் கோவை தியாகராயர் படிப்பகத்தில் நடைபெற்ற திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் அமைப்புக் குழு ஆலோசனைக் கூட்டத்தில், தோழர் என். வி. நடராசன், எதிர்கால வேலைகள், நமக்குள் வேண்டிய கட்டுப்பாடு குறித்து எடுத்துரைத்தார். அன்று மாலை 7 மணிக்கு, காந்தி சவுக்திடலில் தோழர் இரா. சுந்தரம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எஸ். ஏ. இராசமாணிக்கம், கண்ணன் ஆகியோர் பேசியபின், தோழர் என். வி. நடராசன் அமைக்கப்படும் தொழில் கழகம், போட்டியாகத் துவக்கப்படாமல், தொழிலாளர்களின் நல்வாழ்விற்காகவும், நாட்டுப் பற்று, மொழிப்பற்று ஆகியவை தொழிலாளரிடையே ஏற்பட வேண்டும் என்பதற்காகப் பாடுப... என்று குறிப்பிட்டு சொற்பொ... ...ாற்றினர்.

---

### சோவியத் எழுத்தாளர்கள்

#### பாரிஸ் வர அனுமதி மறுப்பு

இல்யா எஹ்ரன்பர்க் என்ற பிரபல சோவியத் நாட்டு எழுத்தாளரும், இன்னும் நான்கு எழுத்தாளர்களும் பாரிசில் நடைபெறுகிற மாநாடு ஒன்றில் கலந்துகொள்ள இருந்தனர். ஆனல் பாரிஸ் வருவதற்குத் தேவையான 'வீசா' வழங்க பிரெஞ்சு சர்க்கார் அனுமதி மறுத்துவிட்டது.

பாரிஸ் உடன்படிக்கையின்படி மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்குவதை எதிர்த்து அந்த மாநாடு நடைபெறுகிறது.

---

### காஞ்சி சுந்தரராஜ அய்யங்கார்

#### கார் விபத்தில் காலமானர்

காஞ்சீபுரம், 'பர்மா ஷெல் ஏஜெண்ட்' திரு. பி. சுந்தரராஜ அய்யங்கார், தனது காரில் ஸ்ரீபெரும்புதூர் சென்றுகொண்டிருக்கையில் தங்குவார் சத்திரம் அருகில் மாம்பாக்கத்தில் கார் விபத்துக்குள்ளாகியது. கார் ஓட்டி வந்த 'டிரைவர்' விபத்து சம்பவித்த இடத்திலேயே மாண்டார். சுந்தரராஜ அய்யங்காரும் விபத்துக்கு பலியானர். அவருடன் பிரயாணம் செய்த அவரது அலுவலாளர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினர்.

போலீசார் இடத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினர்.

---

மத்திய உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சிக்கழகம் மைசூரில் நிறுவப்பட்டிருக்கிறது.

# செய்திச் சுருள்

★

### சாத்தான்குளத்தில் கடையடைப்பு

கடந்த ஆகஸ்டுத் திங்கள் 11-ந் தேதியன்று திரு-தமிழக இணைப்புப் போராட்டத்தின்போது திரு-கொச்சி சர்க்கார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைக் கண்டிக்கும் வகையில், 7—12—54ல் சாத்தான்குளத்திலுள்ள வியாபாரிகள், தங்கள் கடைகளை அடைத்தனர். அன்று மாலை 5 மணிக்கு காந்தி மைதானத்திலிருந்து சர்வ கட்சியினரையும் கொண்ட மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு, நகரின் முக்கிய வீதிகள் வழியாகக் கோஷங்கள் முழக்கிக்கொண்டு சென்றது. இரவு 7 மணியளவில், காந்தி மைதானத்தில் திரு. வே. ஞானமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்ற கண்டன கூட்டத்தில் தோழர்கள் கே. கே. சங்கரன் வைத்தியர், சேர்மத்துரை (தி. மு. க.), சண்முகம், வி. சு. காசி (தி. மு. க.), எஸ். வெள்ளச்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். (ந-நி.)

---

### செங்கல்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன்

6—12—54ல், மேற்படி பெடரேஷன் சார்பில், செ. 255 புலிப்பாக்கம் கிராமத்தில் தோழர் ஏ. கோவிந்தராசன் தலைமையில் தோழர் ஏ. இரத்தினம் எம். எல். ஏ., அவர்கட்கு ஓர் வரவேற்புப் பத்திரமும், பல கிராமங்கள், சங்கங்கள் சார்பில் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. புலிப்பாக்கம் கிராமத்தில் தோழர் இரத்தினம் அவர்கள் ஒரு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷனை ஆரம்பித்து வைத்துச் சொற்பொழிவாற்றினர். பின்னர், செங்கல்பட்டு—திருச்சி முக்கிய சாலையிலிருந்து புலிப்பாக்கம் காந்தலூருக்கு சுமார் 1½ மைல் தூரத்திற்கு சாலை வசதி செய்து கொடுக்கும்படி சர்க்காரையும், அக்கிராமத்தில் உபயோகிக்க முடியாமல் கெட்டுப் போய்க் கிடக்கும் கிணறென்றை சுத்தப்படுத்தித் தருமாறு மாவட்டக் கழகத்தாரையும், தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை அதிகம் கொண்ட அக்கிராமத்தில் புதிய பள்ளி ஒன்றை நிறுவ அரசாங்கத்தையும், மாவட்டக் கழகத்தாரையும் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### குள்ளக்காபாளையத்தில் ஆரம்பப்பாடசாலை திறப்பு

8—12—54 காலை 10 மணிக்கு, இவ்வூரில் திரு. கே. ஏ. சண்முகசுந்தரம் தலைமையில், ஒரு ஆரம்பப் பாடசாலை திறப்பு விழா நடைபெற்றது. எம். திருமூர்த்தி, கே. என். திருமூர்த்தி, கே. என். கிருஷ்ணசாமி, எஸ். வரதராஜு, காளியண்ணன், அச்சுதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கூட்ட ஆரம்பத்தில் குள்ளக்காபாளையத்தில் ஒரு ஆஸ்பத்திரி கட்ட ஆகும் செலவில் பாதிப் பணத்தை பொள்ளாச்சி கே. கே. அருணசலம் செட்டியார் கொடுப்பதாகவும், பள்ளிக்கூடம் கட்ட ஆகும் செலவில் பாதிப் பணத்தை திரு. கே. ஏ. சண்முகசுந்தரம் செட்டியார் கொடுப்பதாகவும் கோவில்பாளையம் பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் வாக்களித்துள்ளார்கள்.

---

### அறிவு வளர்ச்சிக் கழகத் துவக்கம்

12—12—54 இரவு 7 மணிக்கு, நாய்க்கனூர் (வ. ஆ. மாவட்டம்) கிராமத்தில், தோழர் ல. பெருமாள் தலைமையில் அறிவு வளர்ச்சிக் கழகம் துவக்கப்பட்டதுடன் நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : ல. இரத்தினவேலன்; துணைச் செயலாளர் : ல. சுப்பிரமணியன் ; பொருளாளர் : எம். கே. எஸ். மணி.

### மதுரை—கோரிப்பாளையம் இளைஞர் பகுத்தறிவு மன்றம்

12—12—54 மாலை 5 மணிக்கு தோழர் இ. பி. சி. யாகூப் தலைமையில் நடைபெற்ற மன்றச் செயற்குழுக் கூட்டத்தில், சென்னை சர்க்காரின் நாடக சட்ட திருத்த மசோதாவைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டும், 2—12—54ல், மதுரையில் நடைபெற்ற சம்பவங்களுக்குக் காரணமாயுள்ளவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், 14—12—54ல் 'இராமாயண' கலவரம் சம்மந்தமாக விசாரணை செய்ய மதுரை வரும் திரு சத்தியநாதன் அவர்களை, மன்றச் சார்பில் ஐந்து பேர் கொண்ட குழு ஒன்று சந்திப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

### திருவள்ளுவர் முத்தமிழ் கழகம்

24—10—54ல், சென்னை பெத்துநாய்க்கன் பேட்டையிலுள்ள மேற்படி கழக அமைப்புக் குழு கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : கா. வே. உலகநாதன் ; துணைச் செயலாளர் : சி. சோ. சுந்தரம் ; பொருளாளர் : மு. நடராசன் ; செயற்குழு உறுப்பினர்கள் : மு. ப. புட்பரத்தினம், கா. மு. நரசிம்மன், தி. நா. இரத்தினம், இ. ம. ஷரீப். பொங்கல் திருநாளன்று கழகத் திறப்பு விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

---

### சென்னை—திருவொற்றியூர் கலைவளர்ச்சிக் கழகம்

6—12—54 மாலை நடைபெற்ற மேற்படி கழகச் செயற்குழுவினரின் அவசரக் கூட்டத்தில், திரு. கிருஷ்ணமூர்த்தி ('கல்கி') அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், சென்னை அரசாங்கம் அண்மையில் கொண்டுவர இருக்கும் புதிய நாடக சட்டத் திருத்த மசோதாவை வன்மையாகக் கண்டித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

---

### பம்பாயில் தமிழ் விழா

#### திருச்சி விசுவநாதம் கலந்து கொள்வார்

இம்மாதம் 24, 25, 26-ம் நாட்களில் பம்பாயில் தமிழ் விழா நடைபெறுகிறதென்றும், மூன்று நாட்களும் பேசவேண்டும் என்று வந்த அழைப்பை திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் ஏற்றுக்கொண்டிருக்கிறர் என்றும், அவர் 22-ந் தேதி காலை சென்னையிலிருந்து பம்பாய் எக்ஸ்பிரசில் புறப்படுகிறர் என்றும் தெரியவருகிறது.

---

### கம்மசமுத்திரம் பெற்றேர் சங்க விழா

10—11—54 மாலை 6-30 மணிக்கு தோழர் மணிஎழிலன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் 'மாணவமாணவிகளின் கும்மி கோலாட்டம், அபிநயக் கதைகள் ஆகியவை நடந்த பின்பு, தோழர்கள் தமிழ்ச்செல்வன், தென்னரசு, அருணசலம் ஆகியோர் 'பெற்றேர் கடமை' என்பது பற்றிப் பேசினர். தலைவர் தமது முன்னுரையில், பெற்றேர்கள் குழந்தைகளை வளர்க்கும் முறை, கடமை, கல்வியின் அவசியம் ஆகியவை குறித்துப் பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### பெயர் மாற்றம்

திருமோகூர் தோழர் மரு. சு. தங்கய்யா அவர்களது பெயர் 5—12—54ல் 'இளந் திருமாறன்' என மாற்றப்பட்டது. அது சமயம் பல தோழர்கள் பாராட்டுரை வழங்கினர்.

# திருமணங்கள்

5—12—54 காலை 9 மணியளவில் சென்னை பல்லாவரத்தை அடுத்த அனகாபுத்தூர் கிராமத்தில் தோழர் ப. ராஜு (நாயுடு வகுப்பு) — தோழியர் மீனட்சி அம்மை (தெலுங்கு செட்டியார்) திருமணம் தோழர் சின்னசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஷண்முகானந்தம், திருநாவுக்கரசு, வில்லியம். ராஜு ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசியதும், இறுதியாக தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் "திருமணம்" என்னும் தலைப்பில், நடைபெற்ற கலப்புத் திருமணத்தைப் பாராட்டிப் பேசிய அவர், நாட்டில் திராவிடர் இயக்கத்தின் பணி பலன் பெற்றுவருவதற்கு இந்தக் கலப்புத் திருமணம் ஒரு எடுத்துக்காட்டு எனக் கூறி, மத ஆபாசச் சடங்குகளை ஒழித்து ஆடம்பரமின்றி, இருமனமொத்த திருமணங்கள் சீர்திருத்த முறையில் நடைபெறவேண்டியதின் அவசியம் குறித்து விளக்கி நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

* * *

21—11—54 காலை 10 மணிக்கு சூலூரில் தோழர் எஸ். ஏ. சின்னையா—தோழியர் கே. ஆர். கமலவேணி கலப்புத் திருமணம் தோழர் எஸ். ஏ. நாச்சிமுத்து தலைமையில் நடைபெற்றது. 'கலப்பு மணம்' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசினர்.

* * *

22—11—54ல், சேலம் 11-வது வார்டு தி. மு. கழக இல்லத்தில் தோழர் வருதராசன்—தோழியர் கிருட்டிணவேணி சீர்திருத்த கலப்பு மணம் தோழர் பி. எஸ். மாரியப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

* * *

6—12—54 காலை 7-30 மணியளவில் பல்லடத்தில், தோழர் க. நாச்சிமுத்து — தோழியர் அய்யம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம், தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

* * *

28—11—54 மாலை 6 மணிக்கு தூத்துக்குடியில் தோழர் ச. நடராசன்—தோழியர் ப. செல்லம்மாள் சீர்திருத்த கலப்புத் திருமணம் தோழர் ஜான்டேவிட் தலைமையில் நடைபெற்றது. 'திருமணம்' என்பது பற்றி தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

* * *

1—12—54ல், விளாத்திகுளத்தில், தோழர் தவமணி—தோழியர் பெரியதாய் திருமணம் தோழர் எஸ். யாக்கோபு தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர் கே. வி. கே. சாமி பேசினர்.

* * *

1—12—54 காலை 11 மணிக்கு மதுரை கிருஷ்ணபாளையத்தில், தோழர் எம். சங்கிலிராஜ்—தோழியர் பாலகுருவம்மாள் திருமணம் தோழர் லிங்கையா தலைமையில் நடைபெற்றது.

* * *

6—12—54 காலை 9 மணிக்கு உறைநாடு பாசிக் கடைத் தெருவில் தோழர் சேவுரத்தினம்—தோழியர் பொன்னுத்தாய் திருந்திய திருமணம் தோழர் எஸ். சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. 'திருமணம்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசினர்.

---

### அனுதாபம்

6-12-54 இரவு 9-30 மணிக்கு தோழர் பி. சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற தர்மபுரி தி. மு. கழகச் செயற்குழு கூட்டத்தில், துணைச் செயலாளர் தோழர் த. மா. சண்முகம் அவர்கள் தந்தையார் மாரிமுத்து அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

# காஞ்சி பட்டு நெசவாளர்— முதலமைச்சர் சந்திப்பு

## சிக்கலைத்தீர்க்க ஏற்பாடு செய்வதாக வாக்குறுதி

குறைத்துவிட்ட கூலியை உயர்த்தித் தரும்படி சென்ற மூன்று மாத காலமாக பட்டு நெசவுத் தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்து வந்தனர். நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் சகல சமரச முயற்சிகளும் செய்யப்பட்டன. 21—9—54-ல் உதவி-லேபர் கமிஷனர் காஞ்சீபுரம் வந்திருந்து இரு சாராருக்குமிடையே ஒரு ஒப்பந்தம் செய்து வைத்தார். இதை எல்லா பட்டு ஜவுளி முதலாளிகளும் எற்றுக்கொண்டனர். ஆனால், இந்த ஒப்பந்தத்தை மீறி, 27—11—54 முதல் மேலும் கூலியைக் குறைத்து அறிக்கையை வெளியிட்டனர். இவர்களின் கூலி நிர்ணய அறிக்கை உதவி-லேபர் கமிஷனர் செய்து வைத்த தீர்ப்புக்கு விரோதமாக இருந்தது.

இதைக் கண்டு வெறுப்படைந்த தொழிலாளர்கள், 10—12—54 முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். இந்த வேலை நிறுத்தத்தில் 5,000 தறிக்காரர்கள் கலந்துகொண்டுள்ளனர். கிராமங்களிலுள்ள பட்டு நெசவுத் தொழிலாளர்களும் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதையொட்டித்தான் இன்று பிற்பகல் 4 மணிக்கு மேற்படி சங்கத் தலைவர் கே. எஸ். பார்த்தசாரதி தலைமையில் ஐந்து பேர்களைக் கொண்ட தூதுக் குழு முதல் மந்திரி கே. காமராசர் அவர்களை சந்தித்தது. தோழர் எஸ். ராமலிங்கம் எம்.எல்.ஏ. அவர்களும் தூதுக் குழுவினருடன் கலந்து கொண்டார்.

இந்த விஷயத்தில் தலையிட்டு சமரசம் செய்துவைக்க முயற்சிக்கும்படி ஜில்லா கலெக்டர் அவர்களை அனுப்பி வைப்பதாக முதல் மந்திரி வாக்களித்தார்.

15—12—54 பிற்பகல் உதவி - லேபர் கமிஷனர் காஞ்சீபுரம் வந்திருந்து இப்பிரச்சினையை கவனிப்பதாக ஒப்புக் கொண்டுள்ளார்.

வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.

# 'மக்களை பாக். அரசாங்கம் நம்ப வேண்டும்'

## மறுத்தால் குழப்பம் ஏற்படும் என அச்சுறுத்தல்

## நாடு திரும்பிய சுகரவர்த்தியின் முதல் பேச்சு

கராச்சி, டிச. 13—

"உண்மையான மக்களாட்சி பாகிஸ்தானில் நிறுவப்படாவிட்டால், நாடு சீரழியும்; இருக்கும் குழப்பமும் மேலும் கூடுதலாகும்."

"அதிகாரத்தில் எந்த அரசாங்கம் இருந்தபோதிலும், அது மக்களை நம்பி ஆக வேண்டும். இருக்கும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் அவர்களுக்குக் கிடையாது என யூகித்துக் கொள்வது குற்றமாகும். அவர்கள் அறிவிலிகள் அல்ல. அவர்களால் எதையும் அறிந்துகோள்ள இயலவில்லையானால், ஒழுங்காக விளக்கம் தந்து அவர்களைத் தகுதியுடையவர்களாக வைத்தில்லாதவர்களுடைய குற்றமேயாகும்."

என, இதுவரை உடல் நலம் கருதி வெளிநாடு சென்று திரும்பியுள்ள பாக். அவாமி முஸ்லிம் லீக் தலைவரான எச். எஸ். சுக்ரவர்த்தி கூறியுள்ளார்.

நேற்று இரவுதான் இங்குவந்து சேர்ந்த அவர், இன்று மாலை நடந்த வரவேற்புக் கூட்டத்தில் மேலும் பேசும்பொழுது, குழப்பமான நினைப்பும், ஒருவரை ஒருவர் தவறாகப் புரிந்துகொண்டு இருப்பதும் பரவலாக நிலவி இருக்கிறது எனவும், இக்குழப்பமான நினைப்பு மாறவேண்டுமானால் பாகிஸ்தானில் இரு உறுப்புகளுக்குமிடையில், நிலையான அடிப்படையில் நல்லுறவை ஏற்படுத்தவேண்டுமெனவும், அதற்காக நாட்டிற்கும் மக்களுக்கும் ஆவன செய்யப் போவதாகவும், அவர் குறிப்பிட்டார்.

"மக்களாட்சிக் கோட்பாடுகளை மீண்டும் உயிர்ப்பிப்பதில் பாக். அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்வதின் மூலம்தான், அது மேற்கொண்ட செயல் நியாயமானது என்பது ஏற்படும்; இல்லையானால், அச்செயல்கள் அனைத்தும் தவறுடையதேயாகும்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

## ஷேக் அப்துல்லா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்பெல்லாம் இரண்டு மாதங்களாக சிறைவாசத்தை நீடித்து வந்தார்கள். இப்போதுள்ள தடுப்புக்காவல் சட்டப்படி காஷ்மீர் சர்க்கார், ஆறு மாதகால தண்டனையை நீடிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

ஷேக் அப்துல்லா சென்ற ஆண்டு ஆகஸ்டு 10-ந் தேதி முதல் சிறையில் இருக்கிறார். இப்புதிய உத்திரவின்படி 1955 மே. திங்கள் 10-ம் நாள் வரையில் அவர் சிறையில் இருப்பார்,

# கழகக் கூட்டங்கள்

★

**குரும்பேரி**

தாளமுத்துத் திடலில்

17—12—54 மாலை 7 மணிக்கு

தலைவர்: மணி

பேசுபவர்:

இரா. நெடுஞ்செழியன்

★

**எளம்பிள்ளை (சேலம்)**

17—12—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

சிற்றுளி ஏ. சுப்பிரமணியம்

★

**மேற்குவாழியூர்**

17—12—54 வெள்ளி மாலை

தலைவர்: சுப. இரத்தினசாமி

பேசுவோர்:

மணி எழிலன்

க. அறிவுதாசன்

### சென்னை 5-வது வட்ட தி.மு. கழக உறுப்பினர்கட்கு

17—12—54 மாலை 6 மணிக்கு சென்னை 5-வது வட்ட தி. மு. கழக இல்லத்தில், தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

# மதுரை சம்பவம்

## இலாகா விசாரணையே நடைபெறும்

சென்னை ரெவின்யூ போர்டு உறுப்பினர் திரு. டபிள்யூ. ஆர். எஸ். சத்தியநாதன் அவர்கள் மதுரை நகரில் கடந்த டிசம்பர் 2-ந் தேதியன்று, தோழர் இராதாவின் 'இராமாயண' நாடகம் நடத்தப்பட்டதை யொட்டி கலவரம் விளைந்ததும், நிலையைச் சீர்செய்ய போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததும் ஆகிய சம்பவங்கள் குறித்து விசாரணைசெய்ய நியமிக்கப்பட்டுள்ளார். அவரது விசாரணை இலாகா தோரணையாக நடைபெறுகிறதேயன்றி, பகிரங்க விசாரணையல்ல எனத் தெரியவருகிறது.

இந்த விசாரணை, மூன்று நாட்கள் நடைபெறுமாம்.

# சென்னை சட்டசபையில்.....

★

### சுவரே இல்லையே! சித்திரம் எப்படி எழுதுவது?

பாஞ்சாலக்குறிச்சியில் உள்ள கோட்டையைப் பழுதுபார்த்து அங்கு கட்டபொம்மன், ஊமைத்துரை ஆகியவர்களுக்கு சிலை எழுப்பவும், திரு. வ. உ. சிதம்பரம் பிறந்த வீட்டினை விலைக்கு வாங்கி அன்னாருக்கு நினைவுச் சின்னம் எழுப்பவும் சர்க்கார் உத்தேசித்துள்ளதா?" என்று, ஒரு உறுப்பினர் கேட்டார்.

'இல்லை' என்று பதிலளித்த சுப்பிரமணியம், மேலும் எழுந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் "பாஞ்சாலக்குறிச்சியில் கோட்டையே இல்லையே; கோட்டை இருந்தாலல்லவோ பழுதுபார்க்க?" என்று கேட்டதுடன், நாட்டுப் பற்றை வளர்த்த அப்பெரியார்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பதில் யாரேனும் தனிப்பட்டவர் முன் வந்தால் அரசாங்கம் தன்னாலான உதவிகளைச் செய்யும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

### பெரியதல்லவாம் இலங்கையர் பிரச்சினை!

"இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டு சென்னைக்குத் திரும்பி வரும் இந்தியர்களுக்கு உதவுவதற்கான திட்டம் எங்கே?" என்று கேட்டபோது, "இதுவரை இலங்கையிலிருந்துதற்காலிக அனுமதிச் சீட்டுப் பெற்றிருந்து வெளியேற்றப்படுபவர்களின் எண்ணிக்கையொன்றும் அதிகமில்லை; நிலைமையை சர்க்கார் கவனித்து வருகின்றனர்; அவசியமானபோது உதவி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்; பிரச்சினை இப்போது பெரியதாக இல்லாததால் திட்டமெதுவும் இல்லை," என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

### கேட்டது மானியம்

"சென்னையில், சேரி அபிவிருத்திக்கான நிறுவனம் தயாரித்த ரூ. 4.19 கோடி பெறுமான திட்டத்திற்கு, மொத்தமாக மானிய உதவி அளிக்கும்படி இந்திய சர்க்காரை மாநில அரசாங்கம் கேட்டது; ஆனால் மத்திய சர்க்காரோ அந்தத் தொகையை மானியமாகத் தர இசையாமல், வட்டியுள்ள கடனாகத் தரக்கூடும் என்றேதோன்றுகிறது," என சுகாதார மந்திரி ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

### தோற்றப் பொலிவு!

தொழில் கல்லூரிகளில் மாணவர்களை அனுமதிக்கும் விஷயத்தில் 'தோற்றப் பொலிவு'க்கு மார்க்குகள் அதிகரிக்கப்பட்டிருப்பது தேர்தல் குழுவின் கருத்தைக் கவனித்து செய்யப்பட்டதேயென்றும், பட்சபாதத் தன்மைகளுக்கு இடமில்லை என்றும் மராமத்து இலாகா மந்திரி, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

### பாசன மாநாடு

பாசன விஷயங்கள் குறித்து விவாதிக்கவும், கஷ்டங்கள், பிரச்சினைகளைப் பரிசீலித்து நிவாரணத்திற்கு வழி தேடவும் விவசாயிகளுக்கு உதவும்வகையில் முடிவுகளை மேற்கொண்டு அவர்களுக்கு அதை விளக்கித் தெரிவிக்கவும், ஆறுமாதத்திற்கொருமுறை பாசன மாநாடு நடைபெறுவதாக மராமத்து மந்திரி, அங்கத்தினர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

### சொக்கு வரகரிசி

வட ஆற்காடு மாவட்டத்தில் சொக்கு வரகரிசியை உண்டதால் சிலரின் உடல் நலம் பாதிக்கப்பட்டது உண்மைதான் எனவும், உடனடியாக மக்கள் அந்த அரிசி உண்பதைத் தடுக்க, அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவென்றும் சுகாதார மந்திரி ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

### என்ன நியாயம்!

"புதுக்கோட்டை சமஸ்தானம் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்ட காலத்தில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, ராஜாவுக்குச் சொந்தமான சொத்துக்களின்மீது ஸ்தல வரிகள் விதிப்பதினின்றும் விலக்களிக்கப்பட்டிருக்கிறது," என, கேள்விக்குப் பதிலளிக்கையில் நிதி மந்திரியார் தெரிவித்திருக்கிறார்.

"1947 ஆகஸ்டு 15-க்கு முன் அந்த மன்னர் எந்தெந்த சலுகைகளை, உரிமைகளை வழக்கமாக அனுபவித்து வந்தாரோ அவைகளெல்லாம் நிலைக்கப்பட வேண்டுமென்று இந்திய சர்க்கார் தெரிவித்திருந்தனர். எற்கனவே உருவான ஒப்பந்தங்களுக்கு சர்க்கார் மதிப்புத்தந்தாக வேண்டும். பின்னர் ஒரு சமயத்தில் இந்த ஒப்பந்தத்தை ஆராய்கிற சந்தர்ப்பம் வருமென நம்புகிறேன்," எனவும் திரு. சுப்ரமணியம் கூறியிருக்கிறார்.

### பாரம்பரிய நியமனம்

"கிராமாதிகாரிகள் பரம்பரை பாத்தியமாக நியமனம் பெறுகிற முறைக்குப் பதிலாக தக்க யோக்கியதாம்சங்கள் பெற்றவர்களை அப்பதவிகளுக்கு நியமனம் செய்ய வேண்டுமென்பது நிலவரிச் சீர்திருத்தக் குழுவின் சிபாரிசுகளில் ஒன்றாகும்; இது, சர்க்காரின் பரிசீலனையிலிருந்து வருகிறது," என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் நிலவரி மந்திரி மாணிக்கவேலர் தெரிவித்தார்.

# ஆந்திர கலவரம்

## 9 கம்யூனிஸ்டுகள் கைது

கர்னூல்; டிச. 14—

கடந்த 11-ந் தேதியன்று கர்கயாபுரத்தில் நடைபெற்ற கலவரத்தையொட்டி 9 கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இவர்களில் 7 பேர் கலவரத்தில்பட்ட காயங்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனையில் உள்ளனர் என்றும் தெரிகிறது.

சென்ற சனியன்று கர்கயாபுரத்தில், ஊர்வலமாக வந்த கம்யூனிஸ்டுகளுக்கும் காங்கிரஸ்காரர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதன் விளைவாக எழுந்த நிலையைச் சீர்செய்ய போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனில் விடப்பட்டனராம்.

# காங்கிரசிலிருந்து விலகுகிறார்

ஆந்திராவில் பிரகாசம் மந்திரி சபை கவிழ்வதற்குக் காரணமாயிருந்த காங்கிரஸ் சட்டசபை உறுப்பினரான என். சங்கர ரெட்டி, தான் காங்கிரசிலிருந்து விலகிவிட்டதாக பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் ம. சோ. கட்சி ஆதரவுடன் யனிகலூர் தொகுதியிலிருந்து தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் குறிப்பிட்டாராம்.

கடந்த டிசம்பர் 12-ல் பிரதேச காங்கிரஸ் நிர்வாகக் குழு, இவரை 5 வருட காலம் காங்கிரசிலிருந்து விலகுவதென முடிவெடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# தங்க புத்தர் சிலை சின்னாபின்னம்

## 100 பவுண்டு தங்கம் களவு

ரங்கூன், டிச. 14—

வடக்கு பர்மாவில் உள்ள சுதயன்க்வி என்னும் பௌத்த ஆலயத்தில் இருந்த புத்தர் சிலையை கலகக்காரர்கள் உடைத்துவிட்டனர் என்று சொல்லப்படுகிறது.

இந்த ஆலயம் 300 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாம்.

இதில் உள்ள புத்தர் சிலை, தங்கத்தினால் செய்யப்பட்டதென்றும், 250 பவுண்டு எடையுள்ளதென்றும் கூறப்படுகிறது.

இச்சிலையை கலகக்காரர்கள் உடைத்து, 100 பவுண்டு தங்கத்தை தூக்கிச் சென்றுவிட்டார்களாம்.

சென்ற வெள்ளிக்கிழமையன்று இந்தக் கொள்ளை நடைபெற்றதாம்.

# 'எட்டடி குச்சிக்குள் எத்தனை நாள் இருப்போம்?'

## சின்னத்தம்பட்டி தாழ்த்தப்பட்டோர் துயரம்

### மாவட்ட அதிகாரியின் கண்கலக்கம்

விருதுநகர், டிச. 13—

விருதுநகரையடுத்த சின்னத்தம்பட்டி என்ற கிராமத்திற்கு இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் வருகை தந்திருக்கிறார். அங்குள்ள 'அரிசனச் சேரி' ஒன்றை அவர் பார்வையிட்டபோது அங்கு ஒரு குடிசையில் 16 - முதல் 18 பேர்கள் அதாவது இரண்டு, மூன்று குடும்பங்கள் வதிவதைக் கண்டு வருந்தினாராம்.

அவர்களிலே பலர் மழை காலத்தில்கூட, திறந்த வெளியில் தான் படுத்து உறங்க வேண்டியுள்ளது என்று கூறப்பட்டதாம்.

"ஒவ்வொரு ஆண்டும் இந்தக் குடும்பங்கள் மூன்று மடங்கு அதிகரிக்கும்போல் தெரிகிறது. அப்போது இந்தச் சிறிய குடில்கள் அவர்களுக்கு இன்னும் நெருக்கடி மிகுந்ததாக ஆகிவிடக் கூடும். எனவே அரிசனங்கள் குடிசையமைத்துக் கொள்ளத்தக்க இடங்களைத் தேர்ந்தெடுத்துக் கூறினால் அவற்றை அவர்களுக்கு ஒதுக்கித் தர ஏற்பாடு செய்யலாம்" என்று கூறியிருக்கிறார்.

அவருடன் சென்றிருந்த திருமதி விஸ்வாசம் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் இந்த அவல நிலை கண்டு கண் கலங்கினார்களாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,